**தலைப்பு 212- பரீட்சைகள் திணைக்களம்**

**------------------------------------------------**

1. நிதிக்கூற்றுக்கள்

--------------------------

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-------------------------------------

பரீட்சைகள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் பரீட்சைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பரீட்சை திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

--------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

------------------------------------------------------------------------------------------------------------

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்

கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1 (அ) பந்தியில் குறிப்பிட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக கடந்த ஆண்டில் உள்ளடக்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ……………………………….. | …………………… | ...................... |
| (அ) | அச்சக பிரிவிற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 546,264,452 பெறுமதியான டேன் கீ அச்சு இயந்திரம் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 9,160 Wip building and structure இன் கீழ் ஆண்டின் போதான கொள்வனவுகள் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 66,104,844 ஆக இருந்த போதிலும் செலவுப் பேரேட்டின் பிரகாரம் ரூபா 67,816,761 ஆக இருந்ததனால் வித்தியாசம் ரூபா 1,711,917 ஆகும். | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | திணைக்களம் அமைந்துள்ள காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 630,000,000 தொகை நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்தும் அக்காணியை திணைக்களத்திற்கு பெறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 வருமானமற்ற பெறுவனவுகள்

---------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ……………………………….. | …………………… | ...................... |
| 2015 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை அகற்றப்பட்ட கடதாசிகளை விற்பனை செய்ததன் மூலம் பெறவேண்டிய ரூபா 14,066,912 தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | நிலுவையாக உள்ள வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2.2 செலவு முகாமைத்துவம்

----------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ……………………………….. | …………………… | ...................... |
| (அ) | 16 செலவு விடயங்கள் தொடர்பாக 20 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 1,595,872,127 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | முறையான ஆய்வின் பின்னர் மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 04 செலவு விடயங்கள் தொடக்க மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டில் 50 சதவீதத்தினை மிகைத்து ரூபா 211,662,600 மொத்த தொகையான நிதி ஏற்பாடு நி.பி. 66 இன் மூலம் மாற்றப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | முறையான ஆய்வின் பின்னர் மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ……………………………….. | …………………… | ..................... |
| (அ) | முன்னைய ஆண்டில் கிடைத்த ரூபா 792,000 பெறுமதியான கடதாசிகளானது தேவைப்பாட்டிற்குப் பொறுத்தமற்றது என்பதனால் நிராகரிக்கப்பட்டு அந்த இருப்பு களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டு பெறுமதியானது 2020 ஆம் ஆண்டிலிருந்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | பொறுப்புக்களை விரைவாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பழைய பரீட்சை பெறுபேற்று ஆவணங்களை ஸ்கேன் செய்வதற்கு மீளாய்வாண்டில் ஒரு தனியார் நிறுவனத்துடன் ரூபா 15,341,940 பெறுமதியான கடப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. உரிய நிறுவனத்தினால் 2021 நவம்பர் மாதம் ஸ்கேன் செய்யும் மாதிரி முடிவுறுத்தப்பட்டு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அந்த மாதிரிகள் சரியானவையா எனப் பார்த்து உரிய நிறுவனத்துடன் முறையான உடன்படிக்கை செய்து கொள்ளப்படவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது | பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் விரைவாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டுகளில் பொறுப்புக்களும் கடப்பாடுகளும் உள்ளடக்கப்படாதிருந்த போதிலும் 03 உத்தியோகபூர்வ இல்லங்களைக் கொள்வனவு செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 17,820,562 தொகை மற்றும் கற்கைநெறிக் கட்டணம் ரூபா 388,500 தொகைக்காக மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது | முன்னைய ஆண்டுகளில் இனங்காணப்படாத மற்றும் அறிக்கையிடப்படாத பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்காக கொடுப்பனவு செய்யாதிருத்தல் வேண்டும். |

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்க மின்மைகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

அவதானிப்புக்கள்

..........................

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| | ……………….. | …………….. | ………………….. | …… |
| (அ) | 01/2020 ஆம் இலக்க 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரசாங்க நிதி சுற்றறிக்கையின் (ஆ) பந்தி | ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 100,000 உச்ச எல்லையினை மிகைத்து 07 சந்தர்ப்பங்களின் போது ரூபா 12,453,200 தொகையான குறிதத செயலுக்கான உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை. | திணைக்களத்தின் எந்த வாகனமும் 12 மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது 25,000 கிலோ மீற்றர் ஓடியதன் பின்னர் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

-------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ……………………………….. | …………………… | ………………….. |
| 2017 ஆம் ஆண்டில் நிர்மாணங்களை ஆரம்பித்து 2019 சனவரியில் முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி ரூபா 564,320,835 தொகையான ஆறுமாடி பல்நோக்கு கட்டிடத்திற்காக மீளாய்வாண்டின் போது பொறியியல் செயற்பாடு தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்கு ரூபா 57,902,852 தொகையும் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திறங்கு ரூபா 199,634,570 தொகையும் செலுத்தப்பட்டிருந்தும் 2021 திசெம்பர் 31 வரை அதன் வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வேலையை முடிவுறுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ……………………………….. | …………………… | ………………….. |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வரைபு | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | சுறறறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

வருடாந்த செயலாற்றல் அறிக்கையானது நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 பெறுகைகள்

--------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ……………………………….. | …………………… | ..................... |
| (அ) | வினாத் தாள்களின் இரகசியத் தன்மையை பாதுகாப்பதற்காக ரூபா 8,428,637 பெறுமதியான டேர்ன் கீ அச்சு இயந்திரத்தின் Wrapping Solution என்ற பாகம் 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் எதுவித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது கொள்வனவு செய்த திகதியிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | விரைவாக சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வினாத்தாள்களின் சிறந்த இறுதி வடிவினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் பரீட்சாத்திகளின் நம்பகத் தன்மையை அதிகரித்தல் மற்றும் இரகசியத் தன்மையை உச்ச அளவில் பாதுகாக்கும் குறிக்கோளுடன் ரூபா 546,264,452 செலவு செய்து டேர்ன் கீ அச்சு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 2021 க.பொ.த (உயர்தர) பரீட்டசைக்காக 4,898,000 வினாப் பத்திரங்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன் அதன் 509,000 பிரதிகள் அல்லது ஒட்டுமொத்த வினாப்பத்திரத்தில் 10% மாத்திரம் இந்த இயந்திரத்தினால் அச்சிடப்பட்டிருந்தன. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | இயந்திரத்திலிருந்து உச்ச அளவு பயன்பாட்டை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

---------------------------------------------------

பின்வரும்அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ……………………………….. | …………………… | ………………… |
| (அ) | தாபனங்கள் பரீட்சைகளை நடாத்துவதற்காக 2018 - 2021 காலப்பகுதிக்காக 35 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து ரூபா 324,515,433 பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | பரீட்சைகளை நடாத்தும் செலவுகளை தீர்தது வைத்துக் கொள்வதற்காக அல்லது உறுதியான மற்றும் முறையான நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | புதிய கட்டண ஏடுகளின் பிரகாரம் ஆவணச் செயற்பாடுகளுக்காக ஆண்டிற்குச் செலுத்த்ப்படுகின்ற உச்ச அளவு 06 மாத எல்லையை மிகைத்து முன்னைய ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா628,456 தொகை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கல்வி அமைச்சினால் புதிய டிஜிடல் மயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த 700 டெப் கணனிகள் பாடசாலை பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளையின் செயற்பாடுகளுக்காக போதியதல்லாதது என்பதனால் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டு களஞ்சியத்தில் காணப்பட்டன. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 24 மாதங்களான டெப் கணனிகளின் உத்தரவாத காலமானது 2022 சனவரி 31 ஆந் திகதியளவில் 14 மாதங்களைக் கடந்திருந்தும் | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கும் புத்தகங்களில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றின் பெறுமதிகளை இனங்கண்டு நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றிற்கும் 665 டெப் கணனிகள் இருப்பு புத்தகங்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2015 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டுவரை பாடசாலை பரீட்சைகள் மற்றும் நிறுவன பரீட்சைகளை நடாத்தும் போது கைப்பற்றப்பட்ட 545 நடமாடும் தொலைபேசிகளும் 09 தொடர்பாடல் உபகரணங்களும் சம்பந்தமான புலனாய்வு நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | புலனாய்வு நடவடிக்கைகளை துரிதமாக முடிவுறுத்துதல் வேண்டும். |
| (உ) | 2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டுவரை பாடசாலைகள் பரீட்சைப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட ஒழுங்கீனங்கள் சம்பந்தமான 1039 புலனாய்வு சம்பவங்களுக்கான புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனங்களுக்கு ஆட்சேர்க்கும் பரீட்சைகளுக்கான 3,118 சம்பவங்கள் மற்றும் சான்றிதழ் பத்திரங்களுக்கும் ஏனைய 2,792 சம்பவங்களுக்குமான புலனாய்வு நடவடிக்கைகள் 2022 சனவரி 31 ஆந் திகதி வரையும் இடம்பெற்றிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | புலனாய்வு நடவடிக்கைகளை துரிதமாக முடிவுறுத்துதல் வேண்டும். |
| (ஊ) | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 28,500,000 செலவு செய்து ஸ்தாபிக்கப்பட்டிருந்த சூரிய சக்தி முறைமையின் உற்பத்தி இயலளவும் பயன்பாடும் தொடர்பான தெளிவின்மையின் காரணமாக நியமிக்கப்பட்ட திணைக்கள குழுவின் 2018 ஒக்தோபர் 08 ஆந் திகதிய தீர்மானத்திற்கு இணங்க | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | குழு தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முழுமையான மின்சார உற்பத்தியினை மின்சார சபைக்கு விற்பனை செய்ய வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 2018 ஆம் ஆண்டில் 12 ஆம் தரத்திலுள்ள மாணவர்களுக்கு சாதாரண தகவல் தொழில்நுட்ப பரீட்சையானது 130,224 மாணவர்களுக்கு 2019 ஒக்தோபர் மாதம் ரூபா 100,252,667 பணம் செலவு செய்து ஒன்லைன் முறைமையில் நடாத்தி 2021 நவம்பர் மாதம் பெறுபேறுகள் வழங்கப்பட்டிருந்தன. 02 வினாத்தாள்களுக்காகவும் 56,051 விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பதில் வழங்கியிருந்ததுடன் 4,945 விண்ணப்பதாரர்களின் விடைப்பத்திரங்கள் தொடர்பான எதுவித தகவலையும் திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | திட்டமிடப்பட்ட பரீட்சைகளை நடாத்துவதற்காக ஒழுங்குவிதிகளை ஈடுபடுத்துதல வேண்டும். |

04. மனித வளங்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ……………………………….. | …………………… | ..................... |
| மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதனங்களுக்காக ரூபா 352.6 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. திணைக்களத்தில் 192 பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சிரேஷ்ட | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மட்டத்திலுள்ள 14 உத்தியோகத்தர்களின் மற்றும் மூன்றாம் மட்டத்திலுள்ள 12 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.